| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 19/2022 |
| **DATE** | : | **03.07.2026** |
| **பெயர்** | : | **நாகேஷ்வரன்** |
| **தந்தை பெயர்** | : | **செஞ்சிநாயக்கர்** |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. வாதி எனது அண்ணன். நான் B.Sc படித்துள்ளேன். நான் படிப்பை முடித்துவிட்டு ராமச்சந்திரா மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் தொழில் நுட்ப ஊழியராக சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். நான் சென்னையில் தான் தங்கியிருந்து வாரம் ஒரு முறை வந்துசெல்வேன். எனக்கு 2000த்தில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த பின்பும் நான் சென்னையில் முதலில் வாடகை வீட்டில் வசித்து வந்தேன் பின்னர் சொந்த வீட்டிற்கு குடும்பத்துடன் மாறிவிட்டேன். எனக்கு அந்த காலகட்டத்தில் எனது மாத சம்பளம் சுமார் ரூ. 2000 ல் இருந்து ரூ.3 ஆயிரம் இருக்கும்.

2. எங்களது குடும்ப சொத்து சுமார் 6 ஏக்கருக்கு மேல் இருக்கும். எவ்வளவு ஏக்கர் என்று எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் சரிதான் எனது தந்தை தான் பயிர் வைத்திருந்தார் நான் வாரம் ஒரு முறை வந்து செல்வேன். உணவிற்கு அரிசி ஊரில் இருந்து தான் கொடுத்து அனுப்புவார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது குடும்பம் நடத்துவதற்கான அனைத்து செலவுகளையும் நான் தான் பார்த்து வந்தேன். ஊரில் எனது தந்தை, எனது அண்ணன் மற்றும் தங்கைகள் விவசாயம் பார்த்து வந்தார்கள். விவசாயத்தில் இருந்த வந்த வருமாணத்தில் எனக்கு ஏதாவது கொடுத்தார்களா என்றால் இல்லை, எங்களது குடும்பம் பெரிய குடும்பம். 4 தங்கைகள் அம்மா மற்றும் அண்ணன்.

3. விவசாயத்தில் இருந்து வந்த வருமாணத்தை வைத்து தான் எனது தந்தை எனது தங்கைகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் அந்த வருமாணத்தையும் நான் கொடுத்த பணத்தையும் வைத்து தான் திருமணம் செய்தார். மாதம் ரூ.2500 சம்பாதிக்கும் நிலையில் எவ்வாறு எனது தந்தைக்கு

பணம் கொடுத்தேன் என்று சொன்னால் எனது நண்பர் வீட்டில் குறைந்த வாடகைக்கு இருந்தேன், நானும் எனது மனைவியும் சிக்கனமாக செலவு செய்து சுமார் 1000த்தில் இருந்து 1500 எனது தந்தைக்கு கொடுப்பேன். நான் வாங்கிய 2500 சம்பளம் எனக்கு பத்தவில்லை, சென்னையில் குடும்பம் நடத்துவதற்கு எனது தந்தையிடமும், அண்ணணிடமும் பணம் வாங்கி தான் குடும்பத்தை நடத்தினேன் என்று சொன்னால் சரியல்ல.

4. சென்னையில் வந்த வருமாணம் போதவில்லை என்பதால் தான் வெளிநாட்டிற்கு 2007ல் வேலைக்கு சென்றேன். 2005 வரை நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்று சொன்னால் 2009 வரை இருந்தோம் 2009ல் பாகம் பிரித்தோம். எனது பிரமாண வாக்குமூலத்தில் 2005 வரை தான் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் எனது தந்தை 2005ல் காலமானார் அதை வைத்து சொல்லியிருப்பேன். நான் வேலைக்கு சென்ற பிறகும் எனது தந்தை இறந்த பிறகும் குடும்பத்தில் யாருக்கும் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் எனது தந்தை இருந்த வரை கொடுத்தேன், வெளிநாடு சென்றதில் இருந்து கொடுக்கவில்லை.

5. 2009ல் பாகம் பிரித்தபோது நான் காஞ்சிபுரத்திற்கு வந்தேன். பி.வா.சா.ஆ– 1 பாகப்பிரிவினை பத்திரம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் எங்கள் குடும்பத்தின் அனைத்து சொத்துக்களும் பிரித்து கொள்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் 1998ல் ரங்கப்ப நாயக்கரிடம் இருந்து 1 ஏக்கர் 31 ½ சென்ட் கிரையம் வாங்கியுள்ளார் அந்த ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் வாதி பணம் கொடுத்ததாக தான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் ஆனால் அதில் நானும் , எனது தந்தையும் கொடுத்த கூட்டு குடும்ப பணமும் உள்ளது. அந்த விவரத்தை அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. பாகம்பிரித்தற்கு பிறகு என்ன காரணத்திற்காக எனது அண்ணன் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் பொது சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை எழுதிவிட்டு எனது அண்ணன் பெயரில் இருந்ததால் அந்த பொது சொத்திற்கு தனியாக எனது பெயரில் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். தாவா சொத்திற்கு நான் மொத்த கிரைய தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் நானும் எனது தந்தையும் கொடுத்தோம். எனது பதிலுரையில் நான் மொத்த தொகையும் கொடுத்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான்.

7. எனது அண்ணன் தாவா சொத்தை அவரது சுய சம்பாதியத்தில் தான் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. பாகம் பிரிக்கும் போது எனக்கு சாலை ஓரத்தில் எந்த சொத்தும் இல்லை ஆகவே 50 செண்ட் நிலம் கொடுத்தால் அதற்கு ஈடாக இரட்டிப்பு நிலத்தை நான் எழுதி கொடுப்பதாக தெரிவித்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை தவிர்த்து சாலை ஓரத்தில் வேறு ஏதாவது சொத்து உள்ளதா என்றால் இல்லை. மற்ற சொத்துக்கள் அனைத்தும் கழனி வழியாக தான் செல்ல வேண்டும்.

8. நான் எனது அண்ணணிடம் சம்பாதித்தது அனைத்தும் செலவாகிவிட்டது கஷ்டத்தில் இருப்பதாக தெரிவித்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு இரட்டிப்பு நிலம் எழுதி கொடுப்பதாக உறுதி கொடுத்ததின் அடிப்படையில் தான் எனது அண்ணன் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல, நான் வாய்மொழியாகவோ, எழுத்து பூர்வமாகவோ அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை.

9. பி.வா.சா.ஆ–2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் குடும்ப சொத்தை பிரித்து தருவதாக எந்த வாசகமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு நான் எனது அண்ணணுக்கு பணம் கொடுத்தாக எந்த வாசகமும் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். அந்த

செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி என் மேல் உள்ள அன்பு காரணமாக செட்டில்மெண்ட் எழுதப்பட்டதாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. நான் பேசியபடி எனது அண்ணனுக்கு 1 ஏக்கர் 20 செண்ட் எழுதி கொடுத்தேனா என்றால் நான் அவ்வாறு பேசவோ, எழுதி கொடுக்கவோ இல்லை. தான செட்டில்மெண்ட் எழுதுவதற்கு நான் எதுவும் மறுபயன் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 2007ல் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டு 2016 வரை வேலை செய்தேன். நான் வெளிநாட்டில் இருந்ததை காரணம் காட்டி நான் ஊருக்கு வந்த பிறகு எழுதி தருவதாக என் அண்ணிணுடம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட்டில் உள்ள தாவா சொத்தையும் எனது அண்ணன் தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் என்றால் இல்லை அது கரம்பாக இருந்தது.

11. தாவா சொத்தில் எனது அண்ணன் மழை காலத்தில் பயிர் வைத்து இன்னொரு பகுதியில் கோழி வைத்து பராமரித்து வந்தார் என்று சொன்னால் இல்லை எனது பாகத்தில் பயிர் எதுவும் வைக்கவில்லை அவர் பாகத்தில் தான் பயிர் வைத்து வந்தார். தாவா சொத்துடன் மொத்த சொத்தையும் சேர்த்து அவர் தான் பராமரித்து வந்தார் எந்த பிரிவும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2014ல் தான் தாவா சொத்திற்கு நான் பட்டா வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்ட 5,6 வருடம் கழித்து தான் பட்டா வாங்கினேன். அந்த பட்டா பி.வா.சா.ஆ.3 என்றால் சரிதான்.

12. எனது அண்ணன் நான் கூறியவாறு பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதாக தொடர்ந்து தெரிவித்ததால் தான் நான் பட்டா மாற்றினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அவருக்கு 1 ஏக்கர் 20 செண்ட் நிலம் வாங்கி கொடுப்பதாக உறுதி கூறியதன் அடிப்படையிலும் என் மேல் உள்ள பாசத்தாலும் தான் அவர் அந்த ஆவணத்தை ரத்து செய்யாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

13. பி.வா.சா.ஆ.4 வரி ரசீது வழக்கு தாக்கல் செய்த 2022ற்கு பிறகு வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் 2026ல் வாங்கப்பட்டது. நான் எனது அண்ணனை ஏமாற்ற வேண்டும் என்று வழக்கிற்காக இந்த ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN